தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 06.4.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 19452/விசாரணை/E/2023**

திரு. எல்.ரவிச்சந்திரன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ -- பொது அதிகார அமைப்பு
நிர்வாக அலுவலர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
அலுவலகம், தேனாம்பேட்டை,
சென்னை - 600 006

******

## ஆணை

1) இவ்வாணையத்தின் 08.10.2025 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் பொதுத் தகவல் அலுவலர் திருமதி ப.சு.பத்மலோசனி இவ்வாணையத்தில் 16.03.2026 அன்று ஆஜராகி, இவ்வாணையத்தின் உத்தரவுபடி பாலக்கோட்டில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனை மீதான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் ஆகவே, வழக்கு முடிவுற்ற பின்னரே நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மனுதாரர் கோரிய தகவலை வழங்க முடியும் என்ற விவரம் மனுதாரருக்கு 03.03.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, அதன் நகலையும், மனுதாரர் அதை 06.03.2026 அன்று பெற்றுக் கொண்டதற்கு, தபால் துறை இணையதள பக்கத்திலுள்ள பதிவின் நகலையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

2) இதற்கிடையே, மனுதாரர் 13.02.2026 நாளிட்டு, இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தனது 6(1) மனுவில் கோரியிருந்த அதே தகவல்களை குறிப்பிட்டு, நீதிமன்றத்தில் உள்ள வழக்கிற்கு பதில் மனு தாக்கல் செய்வதற்கு அவற்றை தனக்கு வழங்க வேண்டுமென மீண்டும் கோரியுள்ளார்.

3) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், பாலக்கோட்டில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனை மீதான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் ஆகவே, வழக்கு முடிவுற்ற பின்னரே நீதிமன்ற வழிகாட்டுதலின்படி மனுதாரர் கோரிய தகவலை வழங்க முடியும் என பொதுத் தகவல் அலுவலர் அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில், மனுதாரர் தனக்கு தேவைப்படும் ஆவணங்களை நீதிமன்றத்தின் மூலமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவருக்கு தெரிவித்து, மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 19452/விசாரணை/E/2023</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
நிர்வாக அலுவலர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அலுவலகம்,
தேனாம்பேட்டை,
சென்னை-6

திரு. எல்.ரவிச்சந்திரன்,
எண்.6/153, பை பாஸ் சாலை,
பாலக்கோடு - 636 808
தருமபுரி மாவட்டம்

Copy to: File
CR/PA